நரசிங்கபுரம் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள்
முன்னிலை – திரு.அ.ஜ.முகம்மது சம்சுதீன்.,

ந.க.எண். 1322/2023/எப்1. நாள். 19.01.2024.

பொருள் :	மனைஉட்பிரிவு – நரசிங்கபுரம் நகராட்சி – நரசிங்கபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள புல எண்–146/8, 146/9, வார்டு–18–இல் அமைந்துள்ள 0.31.22 சென்ட் இடத்தில் மனைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது – மனைஉட்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.	
பார்வை :	1.	1.திரு.ந.பிரபு, 2.R.பிரகாஷ், 3.S.சதீஷ் என்பவர்களின் விண்ணப்பம் நாள்.09.10.2023.
	2.	நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.SLM/EIVDOMJ/11518/2023/TCP, நாள்.25.07.2023
	3.	நகரமன்ற தீர்மான எண்.294, நாள்.29.12.2023.
	4.	இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.19.01.2024.

****

உத்தரவு:

பார்வை 1–இல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் நரசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட நரசிங்கபுரம் கிராமம் ச.எண்–146/8, 146/9–ல் 0.31.22 சென்ட் இடத்தில் நான்கு மனைகளாக உட்பிரிவு செய்து மனை ஒப்புதல் வழங்க கோரியுள்ளார்.

பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தில் நரசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள கிராம புல எண்–146/8, 146/9-ல் உள்ள 0.31 சென்ட் இடத்தில் நான்கு மனைகளாக பிரிக்கப்பட்டு பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு SWP/DTCP/SALEM/SVB-DIVISION NO.188/2023, நாள்.25.07.2023, Roc No. SLM/EIVLDOMJ/11518/2023/TCP–ல் என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.294, நாள்.29.12.2023–ல் மேற்படி மனைகளுக்குண்டான கட்டணத்தை செலுத்திய பின்னர் இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பின் படி கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 4 மனைகளுக்கு ரூ.4000, நிலமாற்றக் கட்டணம் வழிகாட்டி மதிப்பில் 3% ரூ.2,24,318/– மற்றும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.6000/–ஐ உரிய தலைப்புகளில் செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டது.

பார்வை 4–இல் காணும் அறிவிப்பின் படி கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 4 மனைகளுக்கு ரூ.4000/–ஐ 20.01.2024 அன்று நகராட்சி வங்கி கணக்கிலும், நிலமாற்றக் கட்டணம் வழிகாட்டி மதிப்பில் 3% ரூ.224318/– சலான் எண்.20240120016876 நாள்.20.01.2024 அன்று (E Chalan) மூலம் அரசு கணக்கிலும், மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.6000/–ஐ 20.01.2024 அன்று நகராட்சி வங்கி கணக்கிலும் கணக்கிலும், செலுத்தியுள்ளீர்.

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனை உட்பிரிவிற்க்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

Online Registration No.	Village	Ward	Block No.	T.S.No / R.S.No	Plot No.	Extent In(SQ.M)
EIVLD0MJ	Narasingapuram	18	-	146/8, 146/9	1,2,3 & 4	1263.41

நிபந்தனைகள்

1. அரசாணையின்படி, குடியிருப்பு மனை உட்பிரிவிற்கு மட்டுமே இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / மனைகுடியிருப்பு உட்பிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ஆணை எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
3. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள்.04.02.2019–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள் 31.01.2020–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனையிட வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனை உட்பிரிவின் நுழைவாயிலில் 6x4அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.

19.1.24

ஆணையாளர்,
நரசிங்கபுரம் நகராட்சி.

19/1/24

பெறுதல்

திரு.ந.பிரபு, மனைவி மற்றும் இருவர்
147/A,தெற்குகாடு,
ஆத்தூர்.

நகல்: சார் பதிவாளர், ஆத்தூர்,
நகல்: நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம்.